# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

**சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வை. ஜீ. பத்மசிரி அவர்களால் 2013, மே மாதம் 10 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *238 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007247-350 (2013/05)

## சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 1988 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1988 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க, முதன்மைச் சட்டவாக்கத்தின் விரிவுப் பெயர்.*

**2.** சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தில் (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இத்தால் செல்லுபடியற்றதாக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கீழ்க்காணும் விரிவுப் பெயர் பதிலீடு செய்யப்பட்டுள்ளது :-

''விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான சித்ரா ஒழுங்கை நலன்புரிச் சங்கம் ஒன்றிணைப்பதற்கான கட்டளைச் சட்டம்''

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கான பொதுத் திருத்தம்.*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் மற்றும் வேறு எந்தவொரு எழுத்துமூல சட்டத்திலும் ''சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான (கூட்டிணைத்தல்) சட்டம்'' என்பதற்கு பதிலாக, ''விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான சித்ரா ஒழுங்கை நலன்புரிச் சங்கத்திற்கான கட்டளைச் சட்டம்'' எனச் சொற்களிடப்பட்டு பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

(2) எந்தவொரு ஒழுங்கு விதிமுறைகளிலும், சட்டத்திலும், அறிவித்தலிலும், அறிவுறுத்தலிலும், ஒப்பந்தத்திலும், உறுதியிலும், தொடர்பாடலிலும், சட்டபூர்வமான

2-PL 007247 -50(2013/04)

ஆவணத்திலோ அல்லது வேறு ஆவணத்திலோ "சித்த சுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் சித்ரா ஒழுங்கை நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்" என்பதற்கு செய்யப்படுகின்ற சகல குறிப்பிடலையும், "விசேட தேவைகளுள்ள பிள்ளைகளுக்கான சித்ரா ஒழுங்கை நலன்புரிச் சங்கத்திற்கு செய்யப்படுகின்ற" ஒரு குறிப்பிடலாக வாசித்து புரிந்து கொள்ள வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் வாசகத்தை திருத்தஞ் செய்தல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 (3) ஆவது வாசகத்தை கீழ்க் கண்டவாறு திருத்தஞ் செய்ய வேண்டும் :-

"மரணத்தின்போது, விருப்புடன் விலகும்போது, பொருத்தமற்ற தன்மையின்போது அல்லது பொறுப்புதாரி ஒருவரை பதவியில் இருந்து நீக்கும்போது கூட்டுத்தாபன பொறுப்புச் சபையில் ஏற்படும் வெற்றிடத்திற்காக அங்கத்துவம் இரண்டு வருடங்களுக்குக் குறையாத ஒருவரை கூட்டுத்தாபனத்தில் எஞ்சியுள்ள பொறுப்பாளர்களினால் நியமிக்கப்பட வேண்டும். பொறுப்புச் சபையில் இருக்க முடியுமான உச்ச அங்கத்தவர்களின் எண்ணிக்கை பத்தாகும். (10).

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்